பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 03 2026 Wednesday 12 40 PM
ஆகாஷவாணி
(Tune)

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. மின்வணிகத்தில் நுகர்வோர் உரிமைகளை மீறிய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்காவின் தேசிய தீவிரவாத தடுப்பு மைய இயக்குநர் Joe Kent தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
4. இந்தியா உதவியுடன் இலங்கையில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் பகிர்மாண திட்டத்துக்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
5. உலகக் கோப்பை ஹாக்கி போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<<<>>>>>>

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் மாநிலங்களவை உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பதவிக்காலம் முடிவடையவுள்ள 59 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு இன்று மாநிலங்களவையில் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நாட்டின் வளர்ச்சிக்காக தொடர்ந்து இவர்கள் பங்காற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

மாநிலங்களவையில் இந்த உறுப்பினர்கள் சிறப்பாக செயலாற்றியதாக பிரதமர் புகழாரம் சூட்டினார்.

பதவிக்காலம் நிறைவடையும் மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. Harivansh, அவையில் அவரது கடமையை சிறப்பாக செய்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

மாநிலங்களவையை சுமூகமாக நடத்த அனைத்து உறுப்பினர்களுடனும் அவர் ஒருங்கிணைந்து செயல்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<<>>>>>>

மின்வணிகத்தில் நுகர்வோர் உரிமைகளை மீறிய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், கடந்த **2020**-ம் ஆண்டில் இருந்து இதுவரை மின் வணிகங்களில் நுகர்வோர் பாதிப்படையும் வகையில் செயல்பட்ட **997** நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளதாக கூறினார்.

பாதிக்கப்பட்ட நுகர்வோர்களுக்கு ஆயிரத்து **440** கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து திருக்குறள் புத்தகத்தை வழங்கினார்.

இதுதொடர்பாக அமைச்சர் வெளியிட்டுள்ள பதிவில், திருக்குறளை உலகெங்கும் கொண்டு சென்று தமிழுக்கும் திருக்குறளுக்கும் பிரதமர் தொடர்ந்து பெருமை சேர்த்து வருவதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சூரிய ஒளி மின்சார தகடுகள் உற்பத்தி செய்வதற்கான உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான அனுமதி பட்டியலை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் 2028 ஜூன் ஒன்றாம் தேதி முதல் இது அமுலுக்கு வரும் என்று கூறியுள்ளது.

அனைத்து சூரிய மின்சக்தி திட்டங்களிலும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள உற்பத்தியாளர்களை பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இன்று காலை நேரிட்ட தீ விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

இந்தூர் பெங்காலி ஸ்கொயர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் இன்று அதிகாலை மின்சார கார் சார்ஜ் செய்யும்போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் வைக்கப்பட்டிருந்த நான்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களும் வெடித்ததில் இந்த குடியிருப்பு இடிந்து தரைமட்டமானது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த மூன்று பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மத்திய பிரதேச அமைச்சர் திரு. கைலாஷ் விஜய் வர்கியா, இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

தில்லி **Palam** குடியிருப்பில் இன்று காலை தீ விபத்து நேரிட்டது. **30-**க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தில்லி தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

இந்த தீ விபத்தில் உயிர் சேதம் எதுவும் இல்லை என்று காவல் துறை கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>

பஞ்சாபில் உலக வங்கியுடன் இணைந்து பஞ்சாப் **Sikhya Kranti** பள்ளி கல்வி சீர்திருத்த திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

உலகத்தரத்துக்கு இணையாக பள்ளிக் கல்வியை உயர்த்தும் நோக்கில் **3** ஆயிரத்து **500** கோடி ரூபாய் முதலீட்டில் அடுத்த ஆறு ஆண்டுகளில் இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டம் செயல்படுத்தப்படும் என்று அம்மாநில அரசு கூறியுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த உலக வங்கி **2** ஆயிரத்து **500** கோடி ரூபாய் கடன் உதவி அளிக்கும் என்றும், பஞ்சாப் மாநில அரசு ஆயிரம் கோடி ரூபாய் பங்களிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் நூறு சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சி மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது.

தர்மபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திரு. சதீஷ், கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

**(Voice byte- தர்மபுரி ஆட்சியர்- 55 Sec)**

<<<<<<<<>>>>>>

இலங்கை வடபகுதியில் இந்தியா உதவியுடன் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் பகிர்மாண திட்டத்துக்கு இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய இலங்கை அமைச்சர் **Nalinda Jayatissa,** இந்தியாவின் **Jyoti Structure** நிறுவனமும்

இலங்கையின் **Hayles** நிறுவனமும் இணைந்து வழங்கிய ஒப்பந்தப் புள்ளிக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

**227** கோடி இலங்கை ரூபாய் மதிப்பிலான இந்த திட்டம் மன்னார் மற்றும் முள்ளிக்குளம் துணை மின் நிலையங்களுக்கு இடையே அமைக்கப்படவுள்ளது.

<<<<<<<<>>>>>>

அமெரிக்காவின் தேசிய தீவிரவாத தடுப்பு மைய இயக்குநர் **Joe Kent** தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அமெரிக்க அதிபர் டோனல்ட் டிரம்ப் ஈரானுடனான மோதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ராஜினாமா செய்ததாக கூறியுள்ளார்.

ஈரான், அமெரிக்க நாட்டிற்கு நேரடியாக அச்சுறுத்தல் ஏற்படுத்தவில்லை என்று கூறிய அவர், இஸ்ரேலின் வற்புறுத்தலை ஏற்று அமெரிக்கா ஈரான் மீது நடவடிக்கை எடுத்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

**Joe Kent**-ன் கருத்துகளை நிராகரித்துள்ள வெள்ளை மாளிகை, அமெரிக்கா மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என்ற தகவலின்படி அந்நாட்டின் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>

அமெரிக்காவில் சட்ட விரோதமாக வசிப்பவர்களை தாயகம் திருப்பி அனுப்பி வைப்பதற்கான திட்டம் தொடர்பான சுவெராட்டிகளை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் இதுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாடுகளில் இருந்து சட்ட விரோதமாக அமெரிக்காவில் வசிப்பவர்களை கண்டறிந்து வெளியேற்ற இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் தாயகம் திரும்புவோருக்கு **2** ஆயிரத்து **600** டாலர் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்ற திரு. டோனல்ட் டிரம்ப், மே மாதத்தில் இத்திட்டத்தை கொண்டு வந்தார்.

எல்லை சுங்க பாதுகாப்பு செயலி மூலம் பதிவு செய்து, தாமாகவே முன்வந்து இத்திட்டம் மூலம் தாயகம் திரும்பலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

உலகக் கோப்பை ஹாக்கி போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் வரும் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதல் தொடங்கவுள்ள இந்த போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, வேல்ஸ் அணிகள் டி பிரிவில் இடம் பெற்றுள்ளன.

மகளிர் பிரிவில் இந்தியா, இங்கிலாந்து, சீனா, தென் கொரியா அணிகள் டி பிரிவில் இடம் பெற்றுள்ளன.

---------------------

**Orleans Masters** பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **MR Arjun- Harikaran** இணை கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் எதிர்த்து விளையாடிய செக் குடியரசின் **Jiri kral- Ondrej** இணை காயம் காரணமாக வெளியேறியதை அடுத்து இந்த இணை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

---------------

மெக்சிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் ஷா, கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 1-6, 6-3** என்ற செட் கணக்கில் மெக்சிகோவின் **Rodrigo Alujas**-ஐ வென்றார்.

<<<<<<<<<END>>>>>>>